நேற்று முன்தினம் (0.8.12.2023) தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர், சி.வி.கணேசன் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர், திருமதி தமிழச்சி தங்க பாண்டியன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், பெருநகர மாநகராட்சி ஆணையர் தொழில்நுட்ப கல்வி இயகககம், கொ.வீராகவராவ், மண்டலக் குழு தலைவர், மதியழகன் ஆகியோர் சென்னை பெருநகர மாநகராட்சிக்குட்பட்ட 15வது மண்டலம், சோழிங்கநல்லூர் கூலை மாநகர் 3வது தெருவில் வசித்துவரும் பொதுமக்களுக்கு போர்வை, பிரட், 5 லிட்டர் தண்ணீர் கேன், பால் பவுடர் ஒரு கிலோ பாக்கெட் அடங்கிய நிவாரண பொருட்களை வீடு வீடாகச் சென்று வழங்கினர்.

வடசென்னையில் கனமழையால்

பாதிக்கப்பட்ட பகுதிகளில் 5,700 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள்!

அமைச்சர்கள் க.பொன்முடி - பி.கே.சேகர்பாபு வழங்கினர்!

சென்னை, டிச.10- முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவின்படி, மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட வடசென்னை மக்களுக்கு நேற்று (09.12.2023) உயர்கல்வித்துறை அமைச்சர் டாக்டர் க.பொன்முடி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நிவாரண உதவிகளை வழங்கினர்.

மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் தமிழக அரசும், மாநகராட்சி நிர்வாகமும் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு மழைநீர் வெளியேற்றுதல், உணவு மற்றும் நிவாரண உதவிகள் வழங்குதல், நோய் தொற்று பரவாமல் தடுக்க மருத்துவ முகாம்கள் அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றன. அந்த வகையில் பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க. நகர் மண்டலத்துக்குட்பட்ட பெரம்பூர் பேரக்ஸ் சாலை, லட்சுமி மஹாலில் உயர்கல்வித்துறை அமைச்சர் டாக்டர் க.பொன்முடி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரிசி, பால், பிஸ்கட்கள், பிரட், போர்வை, குடிநீர் உள்ளிட்ட நிவாரண உதவிகளை வழங்கினர்.

அதனைத் தொடர்ந்து, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு இராஜா அண்ணாமலை மன்றத்தில் துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இராயபுரம் மண்டலம், 59வது வார்டு, அன்னை சத்யா நகர் பகுதியைச் சேர்ந்த 1,900 குடும்பங்களுக்கும் பிராட்வே, ஜாபர் ஜெராங் தெருவில் 60வது வார்டை சேர்ந்த 1,500 குடும்பங்களுக்கும், டான்பாஸ்கோ மேல்நிலைப் பள்ளியில் 56வது வார்டை சேர்ந்த 2,300 குடும்பங்களுக்கும் ஆக மொத்தம் 5,700 குடும்பங்களுக்கு அரிசி, பால், போர்வை, பிரட், பிஸ்கட்கள், குடிநீர் போன்ற நிவாரண உதவிகளை வழங்கினர்.

இந்நிகழ்ச்சிகளில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், தாயகம் கவி, கண்காணிப்பு அலுவலர் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்கக இயக்குநர் ப.க ணேசன், இராயபுரம் மண்டலக் குழுத் தலைவர் ஸ்ரீராமுலு, மண்டல அலுவலர் ஏ.எஸ்.முருகன், மாநகராட்சி உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட குளக்கரைக்கு பின்புறமாக

கால்வாயில் ஆவின் பால் பாக்கெட்டுகள் கொட்டப்பட்டது உண்மைக்கு புறம்பானது!

ஆவின் நிர்வாகம் விளக்கம்!

சென்னை, டிச.10 தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட குளக்கரைக்கு பின்புறமாக கால்வாயில் ஆவின் பால் பாக்கெட்டுகள் கொட்டப்பட்டு இருப்பதாக செய்திகள் வெளியிடப்பட்டன. இது தொடர்பாக கீழ் கண்டவாறு விளக்கம் அளிக்கப்படுகிறது.

ஆவின் நிறுவனம் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் சுமார் 15 லட்சம் லிட்டர் பால் சில்லறை விற்பனை யாளர்கள், பால் டெப்போக்கள் மற்றும் மொத்த விற்பனையார்கள் மூலமாக பொது மக்களுக்கு விற்பனை செய்து வருகிறது.

இந்நிலையில் 04.12.2023 தேதியன்று மிக்ஜாம் புயல் காரணமாக அதிக அளவில் மழை பொழிந்ததால் பல இடங்களில் தண்ணீர் தேங்கி மின்சாரம் தடைப்பட்டது. எனவே தாம்பரம் மற்றும் அதன் சுற்றியுள்ள பகுதிகளில் பல பால் விற்பனை நிலையங்கள் மற்றும் சூப்பர் மார்க்கெட்டுகள் மூடப்பட்டன. எனவே சில இடங்களில் 04.12.2023 தேதியன்று பொதுமக்களுக்கு பால் விற்பனை செய்ய இயலாத நிலை ஏற்பட்டது.

இதனால் 04.12.2023 அன்று விற்பனை செய்ய இயலாத ஆவின் பால் பாக்கெட்டுகள் மற்றும் தனியார் பால் பாக்கெட்டுகளை சில சூப்பர் மார்கெட்டுகள் மற்றும் வியாபாரிகள் அங்கே கொட்டி விட்டு சென்றதாக தெரியவருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் ஆவின் பால் பாக்கெட்டுகள் வீணாக கால்வாயில் கொட்டப்பட்டது என்பது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது.

3000 இடங்களில் மருத்துவ முகாம்கள்

களப் பணியில் ஈடுபடுவோர் மனம் புண் படாமல் பேச வேண்டும்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!

சென்னை, டிச.10 - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் நேற்று (09.12.2023) சென்னை, சைதாப்பேட்டை தொகுதி கோதாமேடு பகுதியில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினை தொடங்கி வைத்து ஆய்வு செய்தார்.

பின்னர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள்

தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு முழுவதி லும் சிறப்பு மருத்துவ முகாம்கள் 3000 இடங்களில் தற்போது தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த சிறப்பு மருத்துவ முகாம்கள் சென்னையில் 500 இடங்களில் முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் தற்போது 679 இடங்களில் கூடுதலாக நடைபெற்று வருகிறது.

மேலும் சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோதாமேடு பகுதியில் இன்று தொடங்கி வைத்திருக்கிறேன். தமிழ்நாடு முழுவதும் இந்த சிறப்பு மருத்துவ முகாம்கள் 3000 இடங்கள் என்று அறிவிக்கப்பட்டு தற்போது கூடுதல் இடங்களில் நடைபெற்று வருகிறது. குறிப்பாக மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய 4 மாவட்டங்களில் அதிகப்படியான மருத்துவ முகாம்கள் திட்டமிடப்பட்டிருந்தது.

இதில் சென்னை மாவட்டத்தில் 679 இடங்களிலும், திருவள்ளூர் மாவட்டத்தில் 200 இடங்களிலும், செங்கல்பட்டு மாவட்ட த்தில் 200 இடங்களிலும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 100 இடங்களிலும், தமிழ்நாட்டில் உள்ள மற்ற மாவட்டங்களில் 2000 என்கின்ற வகையில் மொத்தம் 3000 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில் 06.12.2023 முதல் 08.12.2023 ஆகிய 3 நாட்களில் 2149 முகாம்கள் நடமாடும் மருத்துவக்குழுக்களின் வாயிலாக நடத்தப்பட்டிருக்கிறது. இந்த முகாம்களின் மூலம் 1,69,421 பேர் பயன்பெற்று இருக்கின்றனர். இந்த பயனாளர்களில் காய்ச்சல் இருப்பதாக கண்டறியப்பட்டவர்கள் 867 பேர், இதில் இருமல் மற்றும் சளி தொல்லை பாதிப்புகளுக்கு உள்ளானவர்கள் 13,372 பேர், இவர்கள் அனைவருக்கும் தற்போது மருத்துவம் பார்க்கப்பட்டு வருகிறது. இந்த மருத்துவ முகாம்கள் மழை பாதிப்புகள் அதிகமாக உள்ள மாவட்டங்களில் தொடர்ச்சியாக தேவைக்கேற்ப நடத்தப்படும். எனவே மழை வெள்ளம் பாதித்த பகுதிகளைச் சார்ந்த பொதுமக்கள் ரூபெல்லா தடுப்பூசி போட்டுக் கொள்வது அவசியம். அதனை கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பொருட்கள் வழங்குதல்

கடந்த இரண்டு நாட்களாக சைதாப்பேட்டை தொகுதிக்குட்பட்ட அடையார் ஆற்றங்கரையோரம் வசிக்கும் பகுதி பொதுமக்களுக்கு அடிப்படை தேவைகளான பால், ரொட்டி, பிஸ்கட், அரிசி, போர்வை போன்ற பொருட்களை மாநகராட்சி நிர்வாகத்துடன் இணைந்து நிவாரணப் பொருட்களை வழங்கி வருகிறோம்.

குறிப்பாக ஜோகி தோட்டம், நெருப்பு மேடு, ஜோதியம்மாள் நகர், விநாயகபுரம், அன்னை சத்தியா நகர், சின்னமலை ஆரோக்கிய மாதா குடிசை பகுதிகள், கோட்டூர்புரம், சித்திராநகர், வாம்பே குடியிருப்பு போன்ற பல்வேறு பகுதிகளுக்கு நிவாரண பொருட்கள் தரப்பட்டது. நேற்று (9.12.2023) காலை கோதோமேடு, திடீர் நகர், சலவையாளர் காலனி, அண்ணாநகர், போன்ற பல்வேறு பகுதிகளில் உள்ள 2000 குடும்பங்களுக்கு தரப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து சாமியார் தோட்டம், அபித் காலனி போன்ற பகுதிகளில் உள்ள 2000 குடும்பங்களுக்கு இன்று பிற்பகலில் தரப்படவுள்ளது. அதன் பிறகு அருளாயம்பேட்டை, நாகிரெட்டி தோட்டம், தொழிலாளர் குடியிருப்பு ஆகிய பகுதிகளுக்கு தரப்படவுள்ளது. தொடர்ந்து நாளையும் 10,000 குடும்பங்களுக்கு நிவாரண பொருட்கள் தரப்படவுள்ளது. இவையனைத்தும் திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பிலும், அதன் அமைப்புகளின் சார்பிலும் தரப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஒட்டுமொத்தமாக சைதாப்பேட்டையில் 72,000 குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். அதில் அடையாறு ஆற்றங்கரை ஓரத்தில் மட்டும் 40,000 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறும் வகையில் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

மழை தடுப்பு பணிகள் - நிவாரணப்பணிகள்

இயல்பான அளவினை காட்டிலும் இந்தாண்டு 12 மடங்கு கூடுதலாக பெய்துள்ளது. 2015-ஆம் ஆண்டு பெய்த மழையினை காட்டிலும் தற்போது 2 மடங்கு அதிகமான மழை பெய்துள்ளது.

எனவே விமர்சனங்கள் செய்வதற்கு முன்னாள் தமிழ்நாடு அரசு மேற்கெள்ளும் பணிகளை கொஞ்சம் மனசாட்சியோடு எண்ணிப் பார்க்க வேண்டும். மேலும், இரவு பகல் பாராமல் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் களப்பணியில் ஈடுபட்டுக்கொண்டிருப்பவர்களின் மனசு புண்படாதபடியும் பேச வேண்டும்.

இந்த பெருமழையினை அரசியல் செய்ய வேண்டாம், அப்படி அரசியல் செய்தாலும், மழைநீர் வடிகால் பணிகள் குறித்து யார் கேள்வி கேட்டாலும் அது எதிர்க்கட்சித்தலைவர் எடப்பாடி கே.பழனிச்சாமியாக இருந்தாலும், சீமானாக இருந்தாலும் அல்லது மற்ற கட்சிகளைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுடன் நாங்கள் எதிர் எதிரே அமர்ந்து விவாதிக்க தயாராகவே உள்ளோம்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு. மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர் டாக்டர் ஜெ.இராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், மத்திய வட்டார துணை ஆணையர் கே.ஜெ.பிரவின் குமார், நிலைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ.சாந்தகுமாரி, மண்டலக்குழுத் தலைவர் எம். கிருஷ்ணமூர்த்தி மற்றும் உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.

டிசம்பர் 24 தி.மு.க. இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டில் திரளாக பங்கேற்பது குறித்து காரைக்கால் மாநிலக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 8.12.2023 அன்று மாலை 6:00 மணி அளவில் காரைக்கால் காமராஜர் சாலையில் அமைந்துள்ள யூனிகான் பிளாசா அரங்கில் மாநிலக் கழக அமைப்பாளர் ஏ.எம்.எச். நாஜிம் எம்.எல்.ஏ., தலைமையிலும் தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.நாக தியாகராஜன் எம்.எல்.ஏ., முன்னிலையில் இளைஞர் அணியின் அமைப்பாளர் முஹம்மது ரிஃபாஸ் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாநிலக் கழக நிர்வாகிகள் தொகுதி செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் தலைவர்கள் பங்கேற்றனர். மேலும் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் என திரளாக மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், சாலவாக்கம், குன்னவாக்கம் தோட்டவால் ஊராட்சிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட இருளர் குடியிருப்பு மக்களுக்கு நிவாரணப் பொருட்களை மாவட்டக் கழகச் செயலாளரும சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர் வழங்கினார். உடன் ஒன்றிய கழக செயலாளர் டி குமார், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் கோ சிவராமன், அறங்காவலர் குழு உறுப்பினர், வெங்கடேசன், ஒன்றிய குழு உறுப்பினர் நதியா கோபி, ஒன்றிய கழக துணை செயலாளர் தமிழ் வேந்தன், ஒன்றிய கழக பொருளாளர் பாலமுருகன், ஊராட்சி மன்ற தலைவர்கள் சத்யா சக்திவேல், அமுதா தமிழ்வேந்தன் மற்றும் மனோகர்,ரத்தினமாலா, ஜெயக்குமார், வெங்கடேசன்,நந்தா, கெங்கபிள்ளை, கார்த்திகேயன், கோகுல், யோகநாதன், இளங்கோ, முருகன். உட்பட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கன மழையினால் பாதிப்புக்குள்ளான

பெரம்பூர் பகுதிகளில் நிவாரணப் பணிகளை துரிதப்படுத்த அலுவலர்களுக்கு அறிவுரை!

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேட்டி!

சென்னை, டிச.10 - "மிக்ஜாம் புயல்" காரணமாக தொடர்ந்து பெய்த கன மழையினால் சென்னை, செங்கல் பட்டு, திருவள்ளூர் மாவட்டங்கள் பெரிதும் பாதிபடைந்தது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பாதிப்புக்குள்ளான பெரம்பூர் பகுதிகளில் பல இடங்களுக்குச் சென்று ஆய்வு மேற்கொண்டு, மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரணப் பணிகளை துரிதப்படுத்த அலுவலர்களுக்கு தக்க அறிவுரைகளை வழங்கினார். மேலும், அப்பகுதியில் உள்ள மக்களுக்கு உணவு வழங்கினார்.

அதன்படி, நேற்று (9.12.2023) கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் பெரம்பூர், 44வது வார்டு, முனியப்பன் தெருவில் நடைபெற்று வரும் நிவாரணப்பணிகளை பார்வையிடுட்டு ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி :

சமீபத்தில் பெய்த வரலாறு காணாத கடும் மழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சென்னை மாநகரத்தின் பல்வேறு பகுதிகள் வெகுவாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு மக்களுடைய இயல்பு வாழ்க்கை திரும்புவதற்கு ஒரு சில தினங்கள் ஆனது. ஆனால் அப்படி 47 ஆண்டுகள் வரலாற்றில் இல்லாத அளவிற்கு பெரும் மழை பெய்தாலும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையிலான இந்த அரசு மேற்கொண்ட சீறிய முயற்சியின் காரணமாக அடிப்படை கட்டமைப்பு வசதிகள் சிறப்பாக உருவாக்கப்பட்டதன் கரணமாக பாதிப்பிலிருந்து இன்றைக்கு மக்கள் காப்பாற்றப்பட்டுள்ளார்கள் என்பதை இங்குள்ள மக்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள்.

குறிப்பாக, அந்த ஓரிரு நாட்கள் நீர்த்தேக்கம் ஏற்பட்டதன் காரணம், மிக்ஜாம் புயலின் காரணமாக கடல் சீற்றம் அடைந்து பெரும் கடல் அலைகள் உருவானதன் காரணமாக, நகரத்திலிருந்து கடலுக்குச் செல்லும் நீர் கடலில் கலக்க சற்று காலதாமதம் ஆனது. பிறகு புயல் கரையை கடந்த பின்பு கடல் சீற்றம் குறைந்து நீர் கடலுக்குள் செல்ல ஆரம்பித்தது. சென்னை மாநகரத்தின் பல பகுதிகள் இப்போது சகஜ நிலைக்கு திரும்பியுள்ளது.

அந்த வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, அமைச்சராகிய என்னை இந்த பெரம்பூர் சட்டமன்ற தொகுதியில் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை பார்வையிட்டு அவற்றிற்கான தற்காலிக தீர்வுகள் மட்டுமல்லாமல், நிரந்தரமான பல தீர்வுகளை எடுப்பதற்கான அறிவுரைகளை வழங்கியுள்ளார்கள். பாதிகப்பட்டிருக்கக்கூடிய மக்களுக்கு தேவையான பொருட்களை வழங்கு வதற்கும் அறிவுரைகளை வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, நேற்றைய தினம் மக்கள் பிரதிநிதிகள், இயக்கத்தின் கழக வட்ட, பகுதி செயலாளர்கள் மற்றும் அரசின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் ஆகியோர்களோடு கூட்டத்தை நடத்தினோம்.

இன்றைய தினம் பெரம்பூர் சட்டமன்ற தொகுதியில் பாதிக்கப்பட்டுள்ள பல்வேறு பகுதி களுக்குச் சென்று பார்வையிட இருக்கின்றோம், நாளை முதல் தொடர்ந்து நாள் ஒன்றுக்கு 7 வட்டங்களிலும் 7000 குடும்பங்களுக்கு தேவையான உதவிப் பொருட்கள் அதாவது பெட்சீட், சேலை, அரிசி, கைலி, ரவை, ஆட்டா போன்ற பல பொருட்கள் ஒரு குடும்பத்திற்கு தேவையான அளவிற்கு வழங்க இருக்கின்றோம். இயல் நிலைக்கு திரும்புகின்ற மக்களுக்கு அவர்களுக்கு ஏற்பட்ட இந்த நெருக்கடியில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள். அதன்படி, அரசின் சார்பிலும், இயக்கத்தின் சார்பிலும் உதவிகளை செய்து வருகிறோம்.

கேள்வி : குப்பை கழிவுகளை அகற்ற இன்னும் எவ்வளவு நாட்கள் ஆகும்?

பதில் : அதாவது, பொதுவாக மழை பெய்தவுடன் தெருக்களில் நீர் ஏறியிருக்கிறது. அந்த நீர் வடிவதற்கு ஓரிரு நாட்கள் ஆகும். நீர் வடிந்தவுடன் நாம் உடனடியாகவீடுகளிலோ, வீதிகளிலோ புலங்கி விட முடியாது. அவற்றை சுத்தம் செய்கின்ற பணி. இவைகள் எல்லாம் இப்போது நடந்திருக்கிறது. தேங்கியிருக்க க்கூடிய குப்பைகள் ஏறத்தாழ 70 சதவீதம் மேற்பட்ட வீதிகளில் குப்பைகளும் அகற்றப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள பகுதிகளிலும் மிக விரைவாக பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், துறையின் அமைச்சர் கே.என்.நேரு அவர்களும் உத்தரவிட்டுள்ளார்கள். பணிகள் வேகமாக நடைபெற்று வருகிறது என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்கள்.

இந்நிகழ்வின் போது, ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. மற்றும் மக்கள் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

இ.வி. ரங்கப்பன்
டிசம்பர் 10 (2001)

இளம் வயதிலேயே கழகக் கொள்கைகளினால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

ஈரோடு ஒன்றியத்திற்குட்பட்ட ஆர்.என்.புதூர் கிளைக் கழகச் செயலாளராகப் பணியாற்றத் தொடங்கி, 1970 முதல் மூன்று முறை ஈரோடு ஒன்றியக் கழகச் செயலாளராகவும், 1998ல் மாவட்டப் பொருளாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

அத்துடன் கோவை–பெரியார் மாவட்ட பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் துணைப் பொதுச்செயலாளராகவும் – ஈரோடு நிலவள வங்கித் தலைவராகவும், ஈரோடு மாவட்ட கூட்டுறவு அச்சகத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.